
Vindhiya
Cupid's Alarms and Other Stories
Translated by: Andy Sundaresan

# CUPID’S ALARMS

## (கியூபிட்ஸ் அலார்ம்ஸ்)

## எழுத்தாளர் நரசய்யாவின் புத்தக விமர்சனம்

(தினமலர் ஞாயிறு பிப்ரவரி 7, 2016 ல் வெளியானது)

## 1948’ல் முற்போக்கு சிந்தனை!

ஒடிசா மானிலத்தின் கட்டாக்கில், பேராசிரியராக பணியாற்றியவர் சுந்தரேசன்; காந்தீயவாதி. தன் மகளுக்கு இந்தியதேவி என, நாட்டின் பெயரையே வைத்தவர். இந்தியா சுதந்திரம் பெற்ற அந்த மாதத்திலேயே இந்தியதேவியின் முதல் தமிழ்க் கதை அவரது 20ம் வயதிலேயே கலைமகள் பத்திதிரிகையில் வெளியாயிற்று.

இந்தியதேவி தனக்கு ‘விந்தியா’ என்ற புனைப்பெயரைச் சூட்டிக்கொண்டார். அப்போதைய ஆசிரியர் கி.வா. ஜகந்நாதன், இவரது தமிழறிவைக் கண்டு, கலைமகளில் கதைகள் எழுத ஊக்குவித்தார்.

விந்தியா எழுதிய 10 கதைகள், இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. கல்கியில் 1951, ஆகஸ்டில் வெளியான ‘காவல் இதயம்’ என்ற கதைக்கு வெளியான சித்திரம் நூலின் அட்டையை அலங்கரிக்கிறது. கதைகளுடன், அப்போதைய சித்திரங்களும் இடம் பெற்றுள்ளன.

நூலுக்கு, எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் பொருள்மிகு அணிந்துரை தந்துள்ளார். கதைகள் 1947 முதல் 1960 வரை எழுதப்பட்டவை. ஏழு கதைகள் கலைமகளிலும், கல்கி, ஆனந்த விகடன், சுதேசமித்திரன் பத்திரிகைகளில் தலா ஒவ்வொன்றுமாக வெளிவந்தவை. அந்நாட்களின்

சமூக நிலைப்பாட்டை வைத்துப் பார்த்தால், அவை காலத்தால் மிகவும் முன்னேறியவை என்றே சொல்லலாம்.

மனதை உலுக்கி, வாசகரை நிமிர்ந்து உட்கார வைக்கும் கதை, ‘மாதம் பிறந்தது.’

இந்தக் கதையில் இரு பெண்கள்; ஒரு குற்றமனதுடைய ஆண் வழக்கறிஞர்; இவர்கள் இடையில் நடக்கும் உள்ளுணர்வுப் போராட்டம் மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

மொத்தத்தில் இத்தொகுப்பு மனதைத் தொடுகிறது; இவ்வளவு சிறப்பாக அக்காலத்திலேயே கதைகள் எழுதப்பட்டு உள்ளன. அதிலும் அவை முறையாகத் தமிழைப் பயின்றாத, புலம் பெயர்ந்த ஒரு பெண்மணியால் எழுதப்பட்டுள்ளது போற்றுதலுக்கிரிய செயல்பாடு.

எல்லா நூலகங்களிலும், முக்கியமாகப் பள்ளிகளின் நூலகங்களில் வைக்கவேண்டிய தொகுப்பு; தமிழ் இலக்கியத்திற்கு ஆங்கில மூலம் செய்யப்பட்டிருக்கும் ஒரு சிறந்த மரியாதை. அணிந்துரையில் சொல்லப்பட்டதைப் போல, நூலாசிரியர் விந்தியா என தமக்குப் பெயர் வைத்துக்கொண்டாலும் நமக்கு இமயமாகவே தென்படுகிறார்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இந்த நூல், நேர்த்தியாகவும், அச்சுபிழையின்றியும் உள்ளது.

**********

K.R.A. நரசய்யா சென்னையில் வாழும் தமிழ் எழுத்தாளர். நூற்றுக்கும் மேலான சிறுகதைகள், வரலாறு, பயணக்கட்டுரைகள் எழுதியிருக்கிறார். சிறுகதைகள் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன.வரலாறு வகுப்பில் நான்கு புத்தகங்களும், பிரயாண வகுப்பில் தன் கம்போடியா அனுவங்களையும் எழுதியிருக்கிறார். தமிழ் நாடு அரசின் சிறந்த நூலாசிரியர் விருது பெற்றவர